# நீங்கள் சிகரட் விற்பனையாளராக இருந்தால்

மே 2008

ஒன்ராரியோ நகரின் புகைபானம் தொடர்பான வரிவிதிப்புச் சட்டங்கள் பற்றி சில்லறை வியாபாரிகள் அறிந்து கொள்ள வேண்டியவை.

## சட்டத்துக்கு முரணான சிகரட்கள் விற்பனை செய்வது

- இலகுவில் கிடைக்கும்,விற்பனையாகும் சட்டத்துக்கு முரணான மலிவாக விற்பனையாகும் சிகரட்கள் ஒன்ராரியோ மக்களின் உடல்நலத்துக்கு பெரும் ஆபத்தைக் விளைவிக்கும்.
- அது சுகாதார நலன் பேணல்,கல்வி அவிருத்திக்கான பணத்தை இந்த மாகாணத்துக்கு கிடைக்காமல் செய்யும்
- குற்றமிழைப்பவர்கள் பெரும் பணக்காரராக உதவுவதுடன்,வழக்குத்தொடர்வதைத் தடுத்து, நன்கு திட்டமிட்டு அவர்கள் செயல்படவும் அது வழிவகுக்கும்
- நேர்மையான வர்த்தகங்களுக்கு அவர்கள் அநியாயமான போட்டி நிலைமைகளை உருவாக்குவார்கள்
- அது சட்டத்தை சீர்குலைக்கும்
- அதன்விளைவாக குற்றத் தெண்டங்கள்,குற்றங்கள் உற்பட சிறைத்தண்டனைக்கும் ஆளாக்கும்

## எனவே, சிகரட் சில்லறை விற்பனையாளர்களிடம்

- செல்லுபடியான சில்லறை வர்த்தக வரி விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் இருக்கவேண்டும்
- ஒன்ராரியோ மாகாணத்தில் உரியமுறையில் பதிவுசெய்யப்பட்ட சிகரட் மொத்தவிற்பனையாளர்களிடம் மாத்திரம்தான் அவர்கள் சிகரட் கொள்வனவு செய்யவேண்டும்
- ஒன்ராரியோ மாகாண மஞ்சல் நிற கிழிக்கும் நூலைக்கொண்ட சிகரட் பகட்டுகளை மாத்திரம் அவர்கள் விற்பனை செய்யவேண்டும்.

  CANADA DUTY PAID – DROIT ACQUITTÉ – ONTARIO –

- "ON" என்ற எழுத்து சிகரட் பகட்டின் எந்தவொரு இடத்திலாவது தெரியக்கூடிய வகையில் இருக்கவேண்டும்.
- பீச் பழநிறமான அல்லது வேறு நிறங்களிலான பட்டிகள் சுற்றப்பட்ட அல்லது பட்டிகள் சுற்றப்படாத அல்லது பிலாஸ்டிக் உறைகளில் உள்ள சிகரட் பக்கட்களை விற்பனை செய்யவேண்டாம்.
- ஒரு கார்டுன் பெட்டி சிகரட் பெட்டிக்கு குறைந்தபட்சம். மாகாண,பெடரல் அரசின் வரிகள் $43.79 குறிக்கப்பட்டிருக்க வேண்டும். இதைவிடக் குறைந்த வரிஇடப்பட்ட பெட்டிகள் பெரும்பாலும் சட்டத்துக்கு முரணானவைகளாகும்.

  * பீச் பழநிறமாக கிழிக்கும் பட்டிகள் இடப்பட்ட சிகரட்களை விற்பனைசெய்ய வரி விதிப்பில் இருந்து சுதந்திரமளிக்கப்பட்ட கடைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கலாம். மேலும், ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட தொகையான பீச் பழநிறமாக கிழிக்கும் பட்டிகள் இடப்பட்ட சிகரட்களை விற்பனை செய்ய, சில பெயர் குறிப்பிட்ட சில்லறை விற்பனையாளர்களுக்கு பிரத்தியேகமான அதிகாரம் வழங்கப்பட்டு, அவை குறிப்பாக முதல் தேசிய மக்கள் என பெடரல் இந்திய சட்டத்தின் படி அழைக்கப்படும் இந்தியர்களுக்கு மாத்திரம் விற்பனை செய்யலாம்.

## சிகரட் பரிசோதனையின் போது என்ன எதிர்பார்க்கப்படுகிறது

- சிகரட் பரிசோதனை பூரணமாக முடிவடைய சில மணிநேரங்கள் செல்லும்
- பரிசோதகர்களும், கணக்குப் பரிசோதகர்களும் முழுமையான சிகரட் கொள்வனவு,கையிருப்புக்களையும் அது தொடர்பான புத்தகங்கள்,பதிவுப்புத்தகங்களையும் பரிசோதனை செய்து முடிவெடுப்பார்கள்
- சில்லறை வியாபாரிகள், சிகரட் வரியை உரியமுறையில் செலுத்துகின்றனர், என்பதை நிரூபிக்கும் பற்றுச்சீட்டுகள், விற்பனைச் சீட்டுகள்,இறக்குமதிப் பத்திரங்களைக் காண்பிக்கவேண்டும்.
- சில்லறை வியாபாரிகள் புத்தகங்களையும் ஆதாரப்பதிவுகளையும் ஏழு வருடங்களுக்குப் பாதுகாத்து வைக்கவேண்டும்.
- சட்டத்துக்கு முரணானக் கையாளும் சிகரட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டால், பரிசோதகர் தெண்டப்பணத்தைக் மதிப்பீடு செய்து, சட்டத்துக்கு முரணான சிகரட்டுகளைப் பறிமுதல் செய்வார்கள்.
- தெண்ட மதிப்பீட்டுக்கு எதிராக எதிர்ப்பு விண்ணப்பத்தை நிரப்புவதன் மூலம் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் உரிமை சில்லறைவியாபாரிகளுக்கு இருக்கிறது.

## தற்காலிக தடை தொடர்பான திட்டம்

- சிகரட் வரிச்சட்டம், அல்லது புகைகள் அற்ற ஒன்ராரியோ சட்டத்தை ஐந்து வருடங்களில் இரண்டு அல்லது அதற்கு மேல் மீறுபவர்கள் எந்தவகையான சிகரட் விற்பனை செய்வது தற்காலிகமாகத் தடை செய்யப்படும்.
- சட்டத்தை மீறும் தன்மை,எண்ணிக்கையைப் பொறுத்து தடைசெய்யப்படும் காலம் 180 நாட்கள் வரை நீடிக்கும்
- ஒரு சில்லறை வியாபாரி தற்காலிக தடைச்சட்டத்தின் பிரகாரம்
  - சிகரட் விற்பனை செய்வது,விற்பனைக்கு வைப்பது, சேமித்துவைப்பது கூடாது
  - வினியோகஸ்தர்களிடமிருந்து வினியோகம் செய்யும் சிகரட்டைப் பெற்றுக் கொள்ளக் கூடாது.
  - வரி அமைச்சின் இணையத்தளத்தில் அவர் பெயர், கடையின் இருப்பிடம் போன்றவை வெளியிடப்பட்டிருக்கும்.
  - விற்பனைத் தடையைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தடைச்சட்டம் கடையில் பகிரங்கமாக ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.
- தற்காலிக தடைச் சட்டத்தை அனுசரிக்கத் தவறினால் குற்றம் தாக்கல் செய்யப்படுவதுடன், $5,000 முதல் $50,000 வரையில் தெண்டப்பணம் செலுத்தவேண்டியிருக்கும். மேலும், கடையில் உள்ள எல்லா சிகரட்களும் பறிமுதல் செய்யப்படும்.

## மேலதிக தகவல்களுக்கு

பின்வரும் தகவல் சஞ்சிகைகளை வாசிக்கவும்

- TT 1-2008 - Summary of Tobacco Tax Rules for Retail Dealers
- TT 2-2008 - What to Expect from a Tobacco Inspection
- TT 3-2008 - Program to Temporarily Prohibit the Selling, Offering for Sale and Storing of Tobacco

## அல்லது தொடர்புகொள்ளவும்

Ministry of Revenue
Audit, Inspection and Resource Taxes Branch
33 King Street West, PO Box 625
Oshawa ON L1H 8H9

தொலைபேசி: 1 866 ONT-TAXS (1 866 668-8297)
பெக்ஸ்: 905 436-4511
TTY: 1 800 263-7776
Visit: ontario.ca/revenue

© Queen's Printer for Ontario, 2008